[16th March 1966

(b) No action was taken on the representation, as the appointments made were in order.

கைத்தொழில் ஆசிரியர்கள்

*312 கேள்வி—திரு. சோ. ஆறுமுகம் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உயர்நிலைத் துவக்கப் பள்ளியில் பணிபுரியும் கைத்தொழில் ஆசிரியர்களை பகுதிநேர ஆசிரியர்களாக மாற்றியதையொட்டி, எத்தனை ஆசிரியர்கள் அவ்வாறு மாற்றப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : None.

திரு. சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, உயர்நிலைத் துவக்கப் பள்ளிகளிலும், ஆரம்பக் கல்விப் பள்ளிகளிலும், கைத்தொழில் ஆசிரியர்களை எடுத்துவிடவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருப்பதால், பள்ளிகளில் கைத்தொழில் ஆசிரியர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பகுதி நேர ஆசிரியர்களாக இவர்களைப் போட்டுக்கொள்ளலாம் என்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கின்ற பொழுது, முழு நேரம் பணியாற்றி வந்த ஆசிரியர்கள், இப்போது குறைந்த சம்பளத்தில் எப்படிப் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்ற முடியும் என்பதை சர்க்கார் உணர்ந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு முழு நேரம் பாடம் சொல்லிக் கொடுத்தவர்களைப் பகுதி நேர ஆசிரியர்களாக மாற்றவில்லை.

*313 கேள்வி—திரு. சா. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபல் பள்ளிகளிலும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலும், நியமனம் செய்யப்பட்டு பல ஆண்டுகளாகப் பணியாற்றி நிரந்தரமாக்கப்பட்ட புக் பைண்டிங், பாய் நெசவு ஆகிய கைத்தொழிலாசிரியர்கள் தற்சமயம் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes.

திரு. சா. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்படி நீக்கப்பட்டதின் காரணமாக 10 ஆண்டு, 15 ஆண்டு வேலை செய்தவர் எல்லாம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு வேறு வேலைகள் கொடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சிகள் எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நீடில் வொர்க், டாய் மேக்கிங், புக் பைண்டிங் இவைகளிலுள்ள பாடத் திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. புக் பைண்டிங் வேலையில் இருந்தவர்கள் தோட்டவேலைப் பயிற்சியில் வரலாம் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. அவ்விதம் தோட்ட வேலை தெரிந்தவர்கள் முன்வரும்போது, வேலைகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன.